உ
சிவமயம்



"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
# வவுனியா.


புகையிரத நிலைய வீதி, வவுனியா.

| | |
|---|---|
| ஆரம்பம் : **1952** | பதிவு இல : **HA / 4 / V / 5** |

: vaymha@gmail.com    : YMHA vavuniya


## எண் பார்வை அறிக்கையும் ஆண்டறிக்கையும்

## எண் பார்வைக்காலம்
## 01.01.2020 முதல் 31.12.2020 வரை

உ
சிவமயம்



"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
# வவுனியா.

புகையிரத நிலைய வீதி, வவுனியா.

| ஆரம்பம் : **1952** | பதிவு இல : **HA / 4 / V / 5** |
| --- | --- |

www.vavuniyaymha.org

: vaymha@gmail.com    : YMHA vavuniya

## எண் பார்வை அறிக்கையும்
## ஆண்டறிக்கையும்

## எண் பார்வைக்காலம்
## 01.01.2020 முதல் 31.12.2020 வரை

உ
சிவமயம்

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் – வவுனியா.

## வருடாந்த பொதுச்சபைக்கூட்டம் – 2021

இடம் : சுத்தானந்த இந்து இளைஞர் சங்க நடராசர் மண்டபம்
காலம் : 11.04.2021 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி
தலைமை : திரு.செ.சபாநாதன்
(பதில் தலைவர் - வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்)

### நிகழ்ச்சி நிரல்

01. இறைவணக்கம்
02. மறைந்த எமது சங்க உறுப்பினர்களுக்கு அஞ்சலி
03. வரவேற்புரையும், தலைமையுரையும் (தலைவர்)
04. சென்ற ஆண்டு வருடாந்தப் பொதுச்சபைக் கூட்ட அறிக்கை வாசித்தல் (செயலாளர்)
05. அறிக்கையில் எழும் விடயங்கள்
06. வருடாந்த செயற்பாட்டு அறிக்கை (செயலாளர்)
07. எண்பார்வை அறிக்கை (2020ம் வருட அறிக்கை) சமர்ப்பித்தல் (பொருளாளர்)
08. ஆலோசனைகள்
09. புதிய உறுப்பினர்களை அங்கீகரித்தல்.
10. வேறு விடயங்கள்
11. புதிய ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு
12. நன்றியுரை
13. இறைவணக்கம்
14. மதிய உணவு

தங்களைத் கலாசார உடையுடன் சமூகந்தந்து உதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் உண்மையுள்ள
தே.அமலன்
கௌரவ செயலாளர்

உ
சிவமயம்

# கௌரவ தலைவர் அறிக்கை

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

மதிப்புக்குரிய பொதுச்சபை உறுப்பினர்களே! உங்களுக்கு எனது வணக்கம்!

கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தைத் தொடர்ந்து மார்ச் 5 ஆம் திகதி நான் அவுஸ்ரேலியாவிற்கு மூன்று மாதகால சுற்றுலா விசாவில் வந்தேன்.

இந்த இடைக் காலத்திற்கு ஒரு பதில் தலைவராக (தற்காலிகம்) எனது தலைமையில் நடை பெற்ற ஆட்சிமன்றக் கூட்டத்தில் திரு.செ.சபாநாதன் அவர்களை ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்தனர்.

உலகளாவிய கொரோனா நோய் அச்சுறுத்தலினால் என்னால் குறித்த காலத்தில் திரும்ப முடியவில்லை. அதனால் எனது விடுமுறைக் காலத்தை நீடிக்கவேண்டி வந்து விட்டது.

இக்காலத்தில் சங்கத்தை நடாத்திய கௌரவ பதில் தலைவர் (தற்காலிகம்) திரு.செ.சபாநாதன் அவர்களுக்கும், கௌரவ செயலாளர் திரு.தே.அமலன் அவர்களுக்கும், கௌரவ பொருளாளர் திரு.த.யசோதரன் அவர்களுக்கும் மற்றும் கௌரவ ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் சங்கம் பெரிய அளவில் ஒன்றும் செய்ய முடியாமற் போய் விட்டது. சங்கத்தின் கலாசார மண்டப மேல் மாடியையும், உணவு மண்டப மேல் மாடியையும் நிறைவு செய்ய திட்டமிட்டோம். காலம் ஏமாற்றிவிட்டது.

இரண்டு தங்கும் அறைகளை குழியல் அறைகளாக மாற்றியதும் வேறுசில சிறிய திருத்த வேலைகளும் மட்டுமே

கடந்த ஆண்டு ஆரம்பத்தில் நடை பெற்ற முக்கிய வேலையாக இருந்தது.

அத்தோடு நடராசர் மண்டபத்தின் மேடைக்கு மேல் அழகான சிவ சக்தி காட்சியையும் அமைத்தோம். வடக்கு தெற்கு சுவர்களில் சிவபுராணத்தை காட்சிப்படுத்தினோம்.

2020 ஜனவரி முதல் பொதுச் சபைக் கூட்டத்திற்கு இடையில் செய்து முடித்த முக்கியமான வேலைகள் இவையே.

இனிவரும் ஆட்சிமன்றம் நாங்கள் விட்ட பணிகளைத் தொடர வேண்டுமென்று விநயமாக வேண்டுகிறேன்.

எல்லாம் வல்ல நடராசப் பெருமானின் பேரருளினால் எல்லாமே நன்றாக நடக்கும் என நம்புகிறேன். எல்லோருக்கும் எனது நன்றி.

வணக்கம் வாழ்த்துக்கள்.

நா.தர்மராஜா. (அகளங்கன்)
தலைவர்
15.02.2020

# கௌரவ செயலாளர் அறிக்கை

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

மதிப்பிற்குரிய பொதுச்சபை உறுப்பினர்களே!

06.04.2019ம் திகதி நடபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் செயலாளரக தெரிவு செய்யப்பட்டு, தலைவர் திரு நா. தர்மராசா அகளங்கன் அவர்கள் விடுமுறையில் சென்றிருந்தமையினால் கடந்த ஒருவருடமாக பதில் தலைவர் திரு செ. சபாநாதன் அவர்களின் ஒத்துழைப்புடனும் பொருளாளர் திரு த. யசோதரன் மற்றும் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடனும், நாட்டில் ஏற்பட்டுள்ள கொரொணா நிலைமையிலும் எமது சங்கத்தினால் செய்யப்பட்ட சேவைகளை அறிக்கையாக சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். வருடம் ஒருமுறை பொதுச்சபைக்கூட்டம் நடாத்தப்படவேண்டும் என்ற யாப்பு விதிக்கு அமைய தலைவரின் அனுமதியுடன் சரியாக இவ் வருடமும் சித்திரை மாதத்தில் இக்கூட்டத்தை நடாத்த ஆட்சிமன்றம் தீர்மானித்தது. கொரொனா காரணமாக சங்கம் கடும் நிதி நெருக்கடியை சந்தித்துள்ள போதும் தர்மகர்த்தா சபை உறுப்பினர் திரு ந. பாலச்சந்திரன் அவர்களின் ஒத்தழைப்புடன் ஒருவாறு சங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளை செயல்படுத்தக் கூடியதாக இருந்தது. கடந்த 01.01.2020 ம் திகதி முதல் 31.03.2021 வரை சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளப்பட்ட நடவடிக்கை கள் பின்வருமாறு.

- கொரொனா காரணமாக இலங்கை முழுவதும் முடக்க நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் எமது தலைவர் திரு நா. தர்மராஜா அகளங்கன் அவர்கள் அவுஸ்ரெலியாலில் இருந்து நிதி அனுப்பியதன் மூலம் 30

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

- திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திநாயனார் மற்றும் மாணிக்கவாசர் சுவாமிகள் ஆகியோரின் குருபூசை தினங்கள் உரிய நாட்களில் கொண்டாடப்பட்டது. அத்துடன் நடராசர் மண்டபத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

- வெள்ளிதோறும் நடராசப் பெருமானுக்கு பூசைகள் நடைபெற்றது.

- தைப்பொங்கல், பண்டிகைகள் மற்றும் கார்த்திகை தீபம் மற்றும் சரஸ்வதிபூசை உரிய தினங்களில் நிறைவாக கொண்டாடப்பட்டது.

- நீண்டகாலமாக சங்கத்தின் கல்யாண மண்டபத்தின் வர்ண பூச்சு சிறப்பானதாக இல்லாமல் இருந்தது. கல்யாண மண்டபத்தின் வர்ண பூச்சுவேலைகள் தர்மகர்தாசபை உறுப்பினர் திரு ந. பாலச்சந்திரன் அவர்களின் முழுமையான ஒத்தழைப்புடன் வர்ணம் (Paint) மிகப்பெரிய விலைக் கழிவுடன் பெறப்பட்டு தற்போது அழகாக வர்ணபூச்சு வேலைகள் செய்யப்பட்டுள்ளது. இதன் பின்னர் பல நிகழ்வுகள் மண்டபத்தில் நடைபெற்றுள்ளன என்பதனை அறியத்தருகின்றேன். மேலும் எமது சங்க அறைகளில் உள்ள கட்டில்கள் வழுதடைந்த நிலையில் காணப்பட்டது. இதில் புதிதாக 10 இரும்புகட்டில்கள் செய்யப்பட்டு அறைகளில் போடப்பட்டுள்ளன. இதன் மூலம் தற்போது தங்குமிட அறைகளும் அழகுபடுத்தப்பட்டுள்ளது.

- சங்கத்தின் பெயரி இணையதளம் 20.09.2020 ம் திகதி முழுமையான அனுசரணை பெற்று சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்து.

- நவராத்திரி விழா இம் முறை 2 நாட்கள் சங்கத்தின் செலவிலும் எனைய 7 நாட்களுக்கு அனுசரனை பெற்றுக்கொள்ளப்பட்டு கொலு வைத்து சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் திரு.கனகேஸ்வரன் மற்றும் மாணவர்கள், உரிமையாளர் சுதன் அச்சகம், கீர்த்தனாலயா இசை கூடம் மற்றும் மாணவர்கள், திருமனோரஞ்சிதம் கனகரத்தினம் ஆசிரியை மற்றும் மாணவர்கள், உரிமையாளர் சுத்தானந்த விலாஸ், உரிமையாளர் சங்க சிற்றூண்டிசாலை, திருமதி.சூரியாழினி ஆசிரியை மற்றும் மாணவர்கள் ஆகியோரின் அனுசரனையாளர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். விஜயதசமி அன்று சங்கத்தில் திருமதி.புவனநாயகி ஐயம்பிள்ளை அவர்களும் திருமதி.மாணிக்கவாசகம் அவர்களும் இணைந்து 15 சிறார்களுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வும் மிகசிறப்பாக நடைபெற்றது.

- இந்து சமய விழிப்புனர்வினை மக்களிடம் ஏற்படுத்துவதற்கு வருகை தந்த ஆத்மகணானந்த ஜீ அவர்களுக்கு கடந்த செப்ரம்பர் மாதம் முதல் தங்குமிடம் இலவசமாக வழங்கப்பட்டது. இதன் ஊடாக ஆன்மீகம், சமய விழிப்புனர்கு உடல் ஆரோக்கிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. இதில் 3000 பேர் வரை பயன்பெற்றுள்ளனர் என்பதனை அறியத்தருகின்றேன்.

- நாட்டில் ஏற்பட்டுள்ள கொரொனா நிலை காரணமாக சங்கத்தின் செயல்பாடுகளும் பாலர் பாடசாலையின் கலை விழா மற்றும் விளையாட்டப் போட்டிகள் என்பன இடைநிறுத்தப்பட்டுள்ளன.

- பாலர் பாடசாலை நிகழ்வுகள் அணைத்தம் நிறுத்தப்பட்ட-துடன். பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பளம் பெற்றோர்களின் ஒத்துழைப்புடனும் திரு ந. பாலச்சந்திரன் அவர்களின் ரூபா இரண்டு இலட்சம் கடனாக பெற்று கொண்டும் 2020 ஒக்டோபர் மாதம் வரை முழமையாக வழங்கப்பட்டது. இதன் பின்னரும் பாடசாலைகள்

ஆரம்பிக்கப்படாமையினால் 2020 டிசம்பர் மாதம் வரை சங்கத்தின் நிதி போதாமையினாலும் ஆசிரியர்களக்கு இடர் கொடுப்பனவாக ரூபா ஐயாயிரம் மட்டும் வழங்கப்பட்டது.

- இருப்பினும் இக்காலகட்டத்திலும் பாடசாலை ஆசிரியர்களுடனான சந்திப்புக்கள் மற்றும் மாதாந்த ஆட்சி மன்ற கூட்டங்கள் தவறாது நடாத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் கடந்த வருடம் தலைவர் இல்லாத நிலையில் பல வகையிலும் இடர்பாடுகளை சந்தித்திருந்தது. இருப்பினும் ஒரு சிலஆட்சிமன்ற உறுப்பினர்கள் எம்மோடு சேர்ந்து செயல்பட்டிருந்தார்கள். சில உறுப்பினர்கள் ஆட்சி மன்ற கூட்டங்களுக்கு கூட சமூகம் தந்திருக்கவில்லை. இதனால் மாதாந்த ஆட்சிமன்ற கூட்டத்தை கூட்டுவதற்கு கோரம் போதாது நீண்ட நேரம் காத்திருந்து உறுப்பினர்களுக்கு தொலைபேசி மூலம் அழைப்புவிடுத்து கூட்டத்தினை நடாத்த வேண்டியிருந்தது.

இனிவரும் காலங்களிலாவது குறைந்தது ஆட்சிமற்ற கூட்டங்களுக்கேனும் வருகை தரக்கூடிய பொருந்தமானவர்களை ஆட்சிமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யுமாறு பொதுச்சபை உறுப்பினர்களாகிய உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். எமது சங்கம் இந்து சமயத்துக்காக சேவையினை கண்டிப்பாக முன்னுரிமைப்படுத்தி சேவையாற்ற வேண்டும். இதற்கு சகல பொதுச்சபை உறுப்பினர்களும் முழுமையான ஒத்துழைப்பு நல்கவேண்டும் என நடராசபெருமானை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

அன்புடன்,
தே.அமலன்
கௌரவ செயலாளர்.

# கௌரவ பொருளாளர் அறிக்கை – 2020

எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பொதுச் சபை உறுப்பினர்களுக்கு, வவுனியா மண்ணில் சமய, சமூக பணிகளை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்ற சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் பொருளாளராக சேவையாற்றுவதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கிய உங்களுக்கு முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு 2020ம் ஆண்டுக்கான கணக்கறிக்கையினை சமர்ப்கிக்கிறேன்.

2020ம் ஆண்டில் கொரோனா வைரஸ்நோய் தாக்கமானது உலக பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தி இருந்தது. இதில் நாம் விதிவிலக்கல்ல. திருமணங்களை நடாத்துவதில் கட்டுப்பாடு, பயணிகள் தங்குவதில் கட்டுப்பாடு மற்றும் பாலர் பாடசாலையை நடாத்த முடியாது மற்றும் முற்பதிவு செய்த திருமணங்களுக்கான முற்பணத்தினை மீளசெலுத்தல் போன்ற நிலமையில் செலவீனங்களை கட்டுப்படுத்துவது என்பது சங்கத்திற்கு மிகப்பெரிய சவாலாகும். அத்துடன் வாடகைக்கு வழங்கப்பட் கட்டடங்களின் வாடகைகளை ஒரு மாதம் தள்ளுபடி செய்தும் கன்ரீன் மேல்மாடி வாடகையை 3 மாதங்களுக்கு குறைத்து பெறப்பட்டது.

இந்நிலையில் எமக்கு வட்டியற்ற கடனை வழங்குவதற்கு முன்வந்த சங்கத்தின் தலைவர் திரு.நா.தர்மராஜா மற்றும் தர்மகர்தா சபை உறுப்பினர் திரு. க.ந.பாலச்சந்தின் ஆகியோரின் சேவை மனப்பாங்கினை நன்றியுடன் நினைவு கூருகிறேன். இருந்தும் சங்கம் திரு. க.ந.பாலச்சந்தின் அண்ணனிடம் ரூபா 200,000.00 கடன் பெற்று சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம்.

**கடந்த 5 வருடங்களின் வருமான ஒப்பீடு**

| வருமானங்கள் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|
| 1 தங்குமிடம் | 1,794,030 | 1,678,955 | 1,772,860 | 2,037,690 | 1,108,400 |
| 2 திருமண மண்டபம் | 854,000 | 1,396,000 | 1,044,000 | 673,000 | 452,000 |
| 3 உணவு | 180,000 | 402,000 | 433,250 | 482,030 | 226,500 |
| 4 கன்ரின் வாடகை | 220,080 | 212,650 | 230,570 | 220,000 | 210,000 |
| 5 கன்ரின் மேல்மாடி | 96,000 | 72,000 | 92,000 | 90,000 | 80,000 |
| 6 சிறுவர் பாடசாலை | 2,509,260 | 2,773,400 | 2,863,650 | 3,132,650 | 1,697,970 |

2020ம் ஆண்டு மார்ச் மாதத்தடன் எமது சிறுவர் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதினால் ஆசிரியர் கொடுப்பனவுகளை வழங்குவது மிகவும் கடினமாக காணப்பட்டது. ஆசிரியைகளின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு இயலுமானவரை கொடுப்னவுகளை வழங்கியிருந்தோம். 2ம், 3ம் தவணைக் கட்டணங்கள் 50% அறவிட்ட போதும், பெற்றோரிட-மிருந்தும் கட்டணங்களை பெறுவதிலும் சிரமம் காணப்பட்டது.

இந்நிலையில் சில பெற்றாரின் வழிகாட்டலில் பல பெற்றோர் தாமகவே முன்வந்து நன்கொடை மூலம் உதவியிருந்தனர் இருப்பினும் வேறு சிலர் பல இடங்களில் தவறான தகவல்களை கூறி அழுத்தங்களையும் பிரயோகித்தனர். இடைப்பட்ட காலத்தில் பாடசாலைகள் மீள ஆரம்பித்த போது தவணைக் கட்டணங்களை அறவிடும் போது அதில் நன்கொடைகளை கழித்து பெற்றிருந்தோம். சிலர் நன்கொடை களை கழிக்காமல் சங்கத்திற்கு வழங்கியிருந்தனர். சங்கதின் நலனில் அக்கறையுடன் செயற்பட்ட பெற்றோர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

திருமண மண்டபமானது வருமான வீழ்ச்சியை கடந்த இரண்டு ஆண்டுகளாக சந்தித்த போது அது தொடர்பாக மீளாய்வு செய்வதற்கு முடியாமல் போனது துரததிஸ்டமே. இருப்பினும் இந்த ஆண்டில் மீளாய்வு செய்த போது மண்டபத்தின் வர்ணப் பூச்சு மற்றும் ஒரே நேரத்தில் குறைந்தளவானவர்கள் உணவருந் தக்கூடிய இடவசதியும் பெரும் குறையாக அடையாளம் காணப்பட்டது. சங்கத்தின் நிலமையில் அதனை சீர் செய்வது இயலாத நிலையில் சங்கத்தின் தர்மகர்தா சபை உறுப்பினர் திரு. க.ந.பாலச்சந்தின் அண்ணா அவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு சங்கத்தின் தேவையினை கேட்டறிந்து உடனடியாகவே வர்ணப் பூச்சு வேலையினை பொதுச்சபை உறுப்பினரான திரு. ஏ. அருள்செல்வம் மூலம் கடனாக செய்து தந்தார். இதில் வர்ணங்கள் மற்றும் கூலியினை குறைந்த விலையில் வழங்கியிருந்தார். திரு. ஏ. அருள்செல்வம் அவர்களுக்கும் நாம் இந்த இடத்தில் நன்றி கூறுகிறோம். வர்ணப்பூச்சுடன் தங்குமிட கட்டில்கள் 10 னையும் திரு. க.ந.பாலச்சந்தின் அண்ணா கடனாக செய்து தந்திருந்தார். அவருக்கும் எனது நன்றிகள். வர்ணப் பூச்சின் பின் திருமணங்களை விரும்பி சங்கத்தில் நடாத்த பலர் முன்வந்ததிருந்தனர்

2020 ன் வருமானங்களும் வீதமும்

| | வருமானங்கள் | 2020 | வீதம் |
|---|---|---|---|
| 1 | தங்குமிடம் | 1,108,400.00 | 29% |
| 2 | திருமண மண்டபம் | 452,000.00 | 12% |
| 3 | கன்ரின் வாடகை | 210,000.00 | 5% |
| 4 | கன்ரின் மேல்மாடி வாடகை | 80,000.00 | 2% |
| 5 | உணவு | 226,500.00 | 6% |
| 6 | ஏனைய வருமானங்கள் | 94,615.00 | 2% |
| 7 | சிறுவர் பாடசாலை | 1,694,970.00 | 44% |
| | மொத்தம் | 3,866,485.00 | |

கொரோனாவினால் ஏற்பட்ட வருமான இழப்பினால் எமது பல்வேறு பொதுச்சேவைகளை மட்டுப்படுத்த அல்லது நிறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டபோது பல்வேறு உறுப்பினர்கள் தமது உதவிகளை வழங்க முன்வந்தனர் அவர்களின் துணையுடன் சங்கத்தின் சேவைகள் தொடர்ந்தது. தலைவர் திரு.நா.தர்மராஜா அவர்கள் வெளிநாட்டில் லீவில் இருந்த போதும் தன்னுடைய நிதிபங்களிப்பில் 30 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்களை சங்கத்தினூடக வழங்கியிருந்தார். அவருக்கும் எமது நன்றிகள்.

செப்ரெம்பர் மாதத்தில் சங்கத்திற்கு வருகை தந்த பிரம்மரிஷி ஆத்ம கணானந்த ஜி அவர்கள் சங்கத்துடன் இணைந்து பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு இன, மொழி, மத வேறுபாடின்றி ஆன்மீகம் மற்றும் சித்த மருவத்தினூடனக சிகிச்சைகள், ஆசிகள் மற்றும் பரிகாரங்களினூடாக தீர்வுகளை வழங்கியதனூடக சமூக சேவையின் இன்னுமொரு பரிணாமத்தில் நாம் காலடி வைத்தோம். குறிப்பாக சங்கத்துடன் இணைந்து கபசுர குடிநீர் வழங்கியது சங்கத்திற்கும் மக்களுக்கும் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

அவருக்கு தங்கியிருப்பதற்கான இடவசதி இலவசமாக ஆட்சிமன்றத்தின் அனுமதியுடன் வழங்கப்பட்ட போதும் அவரிடம் வரும் அடியவர்கள் பலர் ஏனைய அறைகளை வாடகைக்கு எடுத்து தங்குவதன் மூலம் எமது வருமானத்தை பேணக்கூடியதாக உள்ளது.

கன்ரீன் மேல்மாடியினை வாடகைக்கு பெற்றுக்கொண்ட சிறு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்துடனான ஒப்பந்தம் நிறைவடைந்ததும் அதனை பதிப்பகம் ஒன்றுக்கு வாடகைக்கு வழங்கியிருந்தோம் அவர்களும் கொரோனா காரணமாக தொடர்ந்து நடாத்த முடியாமல் ஒப்பந்தத்திலிருந்து இடைவிலகியதுடன் மாத வாடகையினையும் குறைத்து பெற்றுக்கொண்டோம். அதே போன்று ஏப்பிரல் மாத கன்ரீன், கன்ரீன் மேல்மாடி வாடகைகளை நாட்டின் நிலமைகளை கருத்தில் கொண்டு தள்ளுபடி செய்து வழங்கியிருந்தோம்.

சங்கத்தின் பிரதான வருமானங்கள் திருமண மண்டம், தங்குமிடம், கன்ரீன் வாடகை, கன்ரீன் மேல்மாடி வாடகை, ஆகியவை மூலம் பெறப்பட்டு எமது சேவைகளை வழங்கிய நிலையில் இவ்வருடம் வருமானத்தை அதிகரிப்பதற்கான மூன்று வழிமுறைகளை இனம் கண்டு செயற்படுத்தினோம்.

01. பாவனையற்றிருந்த குளியலறையினை மாலை கட்டுமிடத்திற்கு வாடகைக்கு வழங்கல்.
02. திருமண மண்டபத்தின் மேல் மாடியினை உடற்பயிற்சி நிலையத்திற்கு வழங்கல்.
03. நடன வகுப்புகளை நடாத்தல்

துரததிஸ்டவசமாக கொரோனாவால் உடற்பயிற்சி ஆரம்பிக்க முடியாமல் போனது. எனினும் இவ்வருடத்தில் ஆரம்பிக்க கூடியதாக இருக்கும் என நினைக்கிறேன். இச் சங்கமானது வருமானத்தை நோக்கமாக கொண்டிராத போதும் எமது பணிகளை தொடர்வதற்கு வருமானம் முக்கியமாகக் காணப்படுகிறது.

### 2020ன் செலவீனங்களும் வீதமும்

பாலர் பாடசாலையை எடுத்துக்கொண்டால் அங்கிருந்து கிடைக்கும் வருமானங்கள் பாடசாலையின் செலவுகளுக்கே போதுமானதாக உள்ளது. இவ் வருடத்தில் அண்ணளவாக ஐந்து இலட்சத்து அறுபதாயிரம் ரூபா மேலதிகமாக செலவு செய்யப்பட்டுள்ளது. காரணம் இரண்டாம் தவணைக்கான பாடசாலை நாட்கள் குறைக்கப்பட்டதும் 3ம் தவணை பாடசாலை நடைபெறாத போதும் ஆசிரியர்களுக்கான சம்பளம் வழங்கவேண்டி இருந்தது. இறுதி இரு மாதங்களும் அவர்களுக்கான கொடுப்பனவினை நிறுத்தி உதவித் தொகை மட்டும்

வழங்கப்பட்டது. நிர்வாக ஊழியர்களின் வேலை நேரங்களையும் குறைத்து எமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம்.

| செலவுகள் | | தொகை | வீதம் |
|---|---|---|---|
| 1 | நிர்வாக ஊழியர் சம்பளங்கள் | 743,365.00 | 14 % |
| 2 | சமய நிகழ்ச்சி செலவுகள் | 160,332.00 | 03 % |
| 3 | சிறுவர் பாடசாலை செலவு | 2,197,833.30 | 41 % |
| 4 | திருமண மண்டப செலவு | 389,096.30 | 07 % |
| 5 | நிர்வாகச் செலவு | 349,028.08 | 06 % |
| 6 | நன்கொடைகள். | 362,315.00 | 07 % |
| 7 | அலுவலக பொருட்கள் | 32,717.00 | 01 % |
| 8 | கூட்டச்செலவு, தபால் செலவு | 59,467.00 | 01 % |
| 9 | ஏனைய செலவுகள் | 365,903.72 | 07 % |
| 10 | வர்ணப் பூச்சு செலவு | 88,725.00 | 02 % |
| 11 | இணையத் தளம் ஆரம்பித்தல் | 52,380.00 | 01 % |
| 12 | சொத்துக்கொள்வனவு | 593,135.00 | 10 % |
| | மொத்தம் | 5,394,296.40 | |

இவ்வருடத்திற்கான நன்கொடைகள் அதிகரித்துள்ளமைக்கான காரணங்கள் கொரோனா காலத்தில் எமது ஊழியர்கள் கடமைக்கு வருகை தராதபோதும் அவர்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கியதும் அறங்காவலர் மாநாடு, மற்றும் உலர் உணவுபொதி வழங்கியமையும் பெரும் செலவாக காணப்பட்ட போதும் அறங்காவர் மகாநாடு, உலர்உணவுப் பொதிக்கான செலவினை பொன்னம்பலவாணேச்சர கோவில் மற்றும் திரு.நா.தர்மராஜா ஆகியோர் நன்கொடையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மார்ச் மாதம் கொரோனா பாதிப்பு காரணமாக சொந்தஇடம் திரும்ப முடியாமல் சங்கத்தில் தங்கியிருந்த பயணிகளுக்கு உணவு வழங்கியமையும் காரணமாகும்.

இணைந்த குளியலறையினை அமைப்பதற்கான முன்மதிப்பீடு பெறப்படாது ஆரம்பிக்கப்பட்ட போதும்

வேலைகளுக்கான கொடுப்பனவுகளை ஆட்சிமன்றத்தின் அனுமதியுடன் வழங்கவேண்டிய தேவை ஏற்பட்டது.

சிறுவர் பாடாலையை நிர்வாக ரீதியாகவும், கற்பித்தல் ரீதியாகவும் மேம்படுத்த வேண்டிய தேவை இவ்வருடம் இனம் காணப்பட்டது. இதன் ஒரு பகுதியாக ஆசிரியர்களுக்கு கற்பித்தல் முறை தொடர்பான தங்குமிடத்துடன் கூடிய 5 நாள் பயிற்சிநெறி ஒன்றினை தொடர ஏற்பாடு செய்திருந்தோம். இப் பயிற்சியில் எமது இரு ஆசிரியர்களை பலத்த இடர்பாடுகளுக்கு மத்தியில் பயிற்சியினை பெறவைத்தோம். இக் கட்டணமின்றிய பயிற்சியை எமக்கு வழங்க முன்வந்த அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் (IMHO-USA) தலைவர் மற்றும் உத்தியோகஸ்தர்களுக்கும் எமது நன்றிகள். ஆசிரியர்களுடனான கூட்டங்களை பதில்தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இணைந்து நடாத்தியதன் மூலம் பாடசாலை நடைமுறைகளை மீளாய்வு செய்ததுடன், இலகுவாக எமது இலக்குகளை அடையக் கூடியதாகவும் தவணைக் கட்டணங்களையும் முறையாகப் பெறக்கூடியதாக இருந்தது. இக் காலப்பகுதியில் பாலர் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களின் பதிவுகளில் காணப்பட்ட குறைபாடுளையும் நிவர்த்தி செய்து பதிவு புத்தகத்தில் சகல தரவுகளையும் பதிய கூடியதாக ஏற்பாடுகள் செய்துள்ளோம். ஆசிரியர்களுடன் ஒப்பந்தம் ஒன்றினையும் இக் காலப்பகுதியில் செய்துள்ளதுடன் கல்வித் திணைக்கள முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளருடன் ஒரு கலந்துரையாடலை ஆசிரியர்களுடன் மேற்கொண்டிருந்தோம்.

இவ்வாண்டில் முகாமையாளர் ஒருவரை நியமித்து சகல வருமானங்களையும் ஒரே இடத்தில் பெறும் முறையினை செயற்படுத்தியதன் மூலம் பொதுச் சபையின் நீண்ட கால ஆலோசனையையும் நிறைவேற்றியிருந்தோம். 2017ம் ஆண்டி-லிருந்து முகப்பு புத்தக பக்கத்தினை ஆரம்பித்து எமது செயற்பாடுகளை விரிவுபடுத்தியதுடன், இவ்வருடம் சங்கத்திற்கென்று ஒரு இணையத்தளத்தினை முழுமையான அனுசரனையுடன் ஆரம்பித்து சங்கத்தின் வரலாறு மற்றும் செயற்பாடுகளை யாவரும் அறியும்படி செய்துள்ளோம். இதற்கு அனுசரணை வழங்கிய வெஸ்ரெக், சுத்தானந்த விலாஸ், அறிவாலயம் புத்தக நிலையம் மற்றும் குகன் மோட்டோர்ஸ் ஆகிய நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

2020ம் ஆண்டானது சங்கத்திற்கு மிகவும் சவாலான ஆண்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வருமானம் இழப்பு, தலைவர் விடுமுறையில் சென்று திரும்ப முடியாத சூழல், ஆட்சி மன்ற கூட்டங்களை நடாத்த முடியாத நிலை காணப்பட்ட போதும் மிகவும் கடின செயற்ப்பாட்டினோடு மாதாந்த கூட்டங்களை சுகாதார விதிமுறைகளைப் பேணி ஒழுங்காக நாடாத்தி சங்கத்தின் சகல செயற்பாடுகளையும் தவறாது வழிநடாத்தி-யிருந்தோம்.

சங்கத்தின் செயற்பாடுகளுக்கு பதில் தலைவராக இருந்து வழி நடாத்திய தலைவர் திரு. செ. சபாநாதன் அவர்களுக்கும், அவர்களுக்கு துணையாக செயற்ப்பட்ட செயலாளர் திரு.தே.அமலன் அவர்களுக்கும், வெளிநாட்டில் இருந்தாலும் சங்க செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்துவரும் தலைவர் திரு.நா. தர்மராஜா அவர்களுக்கும் சங்க செயற்பாடுகளுக்கு ஆதரவு தந்து ஆலோசனைகளையும் வழங்கிய ஆட்சிமன்ற உறுப்பினர் களுக்கும், பொதுச்சபை உறுப்பினர்களுக்கும், இந்த நேரத்தில் எனது நன்றியைத் தொரிவித்துக்கொள்வதோடு இச் சங்க செயற்பாட்டில் இணைந்து சேவையாற்றுவதற்கு எனக்குமொரு சந்தர்ப்பத்தை வழங்கிய உங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் எமது வழிகாட்டல்களுக்கு அமைவாக பணியாற்றும் சிறுவர் பாடசாலை அதிபர்,ஆசிரியர், ஊழியர்க்கும் அலுவலகத்தில் பணியாற்றும் முகாமையாளர் மற்றும் ஊழியர்களுக்கும், திருமண மண்டபத்தினை பராமரிக்கும் க.முனீஸ்காந் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இந்த கணக்கறிக்கையினை குறுகிய காலத்தில் ஆய்வு செய்து அறிக்கை தந்த கணக்காய்வாளர் திரு.க.சிவசேகரம் அவர்களுக்கும், மற்றும் கணக்கறிக்கை புத்தகத்தினை குறுகிய கால இடைவெளியில் அச்சிட்டுத்தந்த ஒன்லைன் அச்சகத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இச் சங்கமானது எதிர் காலத்திலும் இன்னும் பல சேவைகளை இம் மண்ணுக்கு வழங்க வேண்டுமென்று இறைவனை வேண்டிநிற்கிறேன்.

நன்றி.

த.யசோதரன்
கௌரவ பொருளாளர்

உ
சிவமயம்

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
# வருடாந்த கணக்காய்வு அறிக்கை – 2020

சங்கத்தின் பெயர் :- வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்

பதிவு இல :- HA/4/V/5

கணக்காய்வுக் காலம் :- 01.01.2020 - 31.12.2020

அங்கத்தவர் விபரம்:-

| | | |
|---|---|---|
| ஆயுள் காலம் | - | 156 |
| சாதாரணஅங்கத்தவம் | - | 91 |
| மொத்தம் | - | 247 |
| நடைபெற்றபொதுக்கூட்டம் | - | 01 |
| ஆட்சிமன்றக் கூட்டம் | - | 12 |

கணக்காய்வாளர் - திரு.க. சிவசேகரம்
(ஓய்வுநிலை கூட்டுறவு பரிசோதகர்)

நான் மேற்படி சங்கத்தின் 2020 ஆம் ஆண்டுக்குரிய பற்றுச் சீட்டுகள், உறுதிச் சிட்டைகள், இறுதிக்கணக்குள், ஆவணங்கள் போன்றவற்றை பரிசீலனை செய்தும் சரிபிழை பார்த்தும் கணக்காய்வு செய்துள்ளேன். எனக்கு சங்க அலுவலகர்களினால் வழங்கப்பட்ட புத்தகங்கள், ஆவணங்களின் படியும், சங்க அலுவலகர்களினால் வழங்கப்பட்ட தகவல்களின் படியும் இங்கே பிரதி கொடுக்கப்பட்டுள்ள இறுதிக் கணக்குகளும் ஐந்தொகையும் சங்கத்தின் நிதி நிலைமையை வெளிக்கொணரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என அபிப்பிராயப்படுகிறேன்.

| தேறியவருமானம் | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| திருமணமண்டபம் | 931,867.15 | 432,065.65 | 289,403 |
| சிறுவர் பாடசாலை | (517,062.10) | 167,560.93 | (560,943) |
| வருமானச் செலவு க/கு | (706,123.35) | 123,289.82 | (1,477,969) |

| செலவுகள் | 2019 | 2020 |
|---|---|---|
| நன்கொடைகள் | 208,060 | 362,315 |
| நிர்வாகச் செலவு | 540,615 | 349,028 |
| ஏனைய செலவுகள் | 812,326 | 365,902 |
| சம்பளங்கள் | 2,293,362 | 2,393,348 |

கடந்த வருடங்களுடன் வருமானங்களை ஒப்பிட்டு பார்கும்போது திருமணமண்டப வாடகைத் தொடர்சியாக அரைவாசியாக குறைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. சிறுவர் பாடசாலை மொத்த வருமான செலவும் பாரிய நட்டத்தை அடைந்துள்ளதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இதற்கு காரணம் வருமானம் குறைவாக கிடைக்கப் பெற்றமையும், கொரோனா நோய் காரணமாகவும் வருமான குறைவு ஏற்பட்டிருக்கலாம்.

செலவீனங்களைப் பொறுத்தவரை நன்கொடைகள் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. மேலும் இவ்வருடம் 534,466.00 ரூபா பெறுமதியான இணைந்த குளியலறை கட்டப்பட்டுள்ளது இதற்கான மதிப்பீடுகளோ அதற்கான அனுமதிகளோ பெறப்படவில்லை. அத்துடன் இந்த இணைந்த குளியலறையுடன் கூடிய அறையும் இலவசமாக நீண்ட நாட்களுக்கு ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது. அதற்கான அனுமதி அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்.

அதே நேரம் அறங்காவலர் திரு.க.ந.பாலச்சந்திரன் அவர்களிடம் ரூபா 200,000.00 கடனாக பெறப்பட்டுள்ளது. இதை வழங்கிய அவருக்கு நன்றிகள்.

அதே நேரம் சங்கம் தனி நபரிடம் கடன் வாங்கும் நிலமைக்கு சென்றது கவலைக்குரிய விடயமாகும். நிறுவனத்தின் ஸ்திரதன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விடயமாகவும் உள்ளதாக அபிப்பிராயப்படுகிறேன்.

நன்றி.

கணக்காய்வாளர்
க.சிவசேகரம்

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா.**

**01.01.2020 - 31.12.2020ந் திகதி வரையான ஐந்தொகை**

| செலவு | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| பொதுநிதி | 15,716,571.95 | |
| இவ்வருட | (1,477,968.35) | 14,238,603.60 |
| செல்மதிகள் | | |
| வாடகை வைப்பு 2015ல் இருந்து | 40,000.00 | |
| மேல் மாடி முற்பணம் | 100,000.00 | |
| கன்ரீன் முற்பணம் | 100,000.00 | |
| க.ந. பாலச்சந்திரன் | 200,000.00 | |
| மாலைக்கடை | 50,000.00 | |
| வைப்பு | 4,486.00 | 494,486.00 |
| | | 14,733,089.60 |

| வரவு | தொகை | மொ.தொகை |
|---|---|---|
| **நிலையானசொத்துக்கள்** | | |
| **01. கட்டிடம்** | | |
| சென்ற வருட மீதி | 12,533,855.53 | |
| இவ்வருடம் (+) | 511,716.00 | |
| | 13,045,571.53 | |
| பெறுமானத் தேய்வு (-) | 626,692.78 | |
| மீதி | | 12,418,878.75 |
| **02. தளபாடம்** | | |
| சென்ற வருட மீதி | 1,599,929.06 | |
| இவ்வருடம் (+) | 81,419.00 | |
| | 1,681,348.06 | |
| பெறுமானத் தேய்வு (-) | 159,992.91 | |
| மீதி | | 1,521,355.15 |
| பொருள் இருப்பு (T Shirt) | 14,525.00 | 14,525.00 |
| **நடைமுறைச் சொத்து** | | |
| நிலையான வைப்புமீதி 01.01.2020 | 901,062.50 | |
| 2020ல் நிலையான வைப்பு ஈட்டிய வட்டி | 95,564.97 | 996,627.47 |
| HNB சேமிப்பு மீதி 01.01.2020 | 80,196.34 | |
| 2020ல் சேமிப்பு ஈட்டிய வட்டி | 2,399.59 | 82,595.93 |
| **வைப்புக்கள்** | | |
| மின் வைப்பு | 16,500.00 | |
| தண்ணீர் | 1,000.00 | |
| IDD பெற | 5,000.00 | 22,500.00 |
| **வருமதிகள்** | | |
| கன்ரீன் வாடகை | 10,000.00 | |
| கன்ரீன் மேல் மாடிவாடகை | 15,000.00 | 25,000.00 |
| 31.12.2020ல் காசுமீதி | | 5,393.00 |
| 31.12.2020ல் காசுப்புத்தக வங்கிமீதி (OD) | | (353,785.70) |
| | | 14,733,089.60 |

க.சிவசேகரம் கௌரவ எண்பார்வையாளர்

த.யசோதரன் கௌரவ பொருளாளர்